# திருக்குறளும் கண்களும்

OPEN ACCESS

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
*வீரமணி, இரா. திருக்குறளும் கண்களும். Shanlax International Journal of Arts Science and Humanities*, Vol. 13, no. S1, 2026, pp. 142-47.

*Corresponding Author:
veeramanilotus@gmail.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11105

***இரா. வீரமணி***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பெரும் பிரிவுகளுக்குள் உலக வாழ்வியலை தத்துவார்த்தமாக எடுத்துரைத்த வள்ளுவருக்கு நிகர் அவரே என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை. மனித வாழ்வின் மிக முக்கியமான கூறாகக் கருதப்படும் காதல் உணர்வுகளை அவர் கண்களின் வாயிலாக அழகியலோடு வெளிப் படுத்தியுள்ளார். உலகம் தோன்றியதிலிருந்து இன்றளவும் அதன் நிலைத்தன்மைக்கு அடிப்படையாக இருப்பது உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியும் அன்புணர்வும் ஆகும். நவீன உலகில் ஆதிமனிதன் பல தொழில்நுட்ப அதிசயங்களை வியப்புடன் காணினும், மனிதர்களிடையே வெளிப்படும் அன்பு உணர்வை இயல்பானதாகவே ஏற்றுக்கொள்வான். இது உயிரியல் பரிணாமத்தில் அன்பு ஒரு அடிப்படை இயற்கை உணர்வாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. வள்ளுவர் மலரினும் மெல்லிது காமம் எனக் கூறுவதன் மூலம் காதலின் நுட்பத்தையும் மென்மையையும் அழகியலோடு விளக்குகிறார். இத்தகைய நுட்பமான உணர்வுகளை சமூகத்திற்கு சரியான முறையில் எடுத்துரைத்தால், வன்முறை, பாலியல் வன்முறை போன்ற சமூகச் சீர்கேடுகள் குறைக்கப்படலாம். சமூகத்தில் காணப்படும் ஆதிக்க மனப்பான்மை, பெண்ணடிமை, பாலியல் சுதந்திரமின்மை, பாலியல் கல்வியின்மை, ஊடகங்களில் பெண்களின் தவறான சித்தரிப்பு போன்றவை பல்வேறு சமூகச் சீர்கேடுகளுக்குக் காரணமாகின்றன. இவற்றை நீக்குவதற்கான சிந்தனைகள் வள்ளுவரின் காலத்திலேயே காணப்படுகின்றன. இந்தப் பின்னணியில், வள்ளுவனின் அழகியல் சிந்தனைகள் கண்களின் வழியாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*

***முக்கிய சொற்கள்:*** *திருக்குறள், கண்கள், காதல் அழகியல், தமிழ் இலக்கியம், தொல்காப்பியம், வள்ளுவர், உணர்வியல் வெளிப்பாடு.*

## முன்னுரை

இலக்கியங்களில் கண்கள் மனித மனங்களில் எழுகின்ற உணர்வுகளை நேரடியாக பிரதிபலிக்கக் கூடிய முக்கிய கருவியாக விளங்குகின்றன. அதனால்தான் கண்களின் முக்கியத்துவத்தைத் தொல்காப்பியர் தமது காலத்திலேயே சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். தமிழ் இலக்கிய மரபில் கண்களைப் பற்றி பேசாத கவிஞர்களே இல்லை எனலாம். உணர்வுகள் ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்துவமானவை. ஒவ்வொரு உயிரும் தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்த பல்வேறு முறைகளைப் பயன்படுத்தினாலும், மிகச் சிறப்பாக வெளிப்படுவது கண்களின் வழியாகவே ஆகும்.

உதாரணமாக, விலங்குகளில் சிங்கம் மிகத் துணிச்சலானதும் வீரமுடையதும் ஆகும். அதன் மனநிலையை அறிய அதன் கண்களை கவனமாக நோக்கினாலே போதுமானது. அதுபோலவே விலங்கினங்களின் கோபம், அன்பு, பரிதவிப்பு, இரக்கம், துயரம், வலி, காதல் போன்ற பல்வேறு உணர்வுகளையும் கண்களின் மூலம் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறு மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களின் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் முக்கிய ஊடகமாகக் கண்கள் விளங்குகின்றன. அவற்றின் நுட்பத்தையும் இலக்கியங்களில் அதன் வெளிப்பாடுகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியத்தில் கண்கள்

தமிழில் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கியமாகவும் தமிழர்களின் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்ள உதவும் முக்கிய நூலாகவும் திகழும் தொல்காப்பியத்தில், கண்களின் முக்கியத்துவம் பல இடங்களில் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது,

**அமரர் கண்முடியும் அறுவகை யானும்**
**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**
**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப** **(தொல்காப்பியம், பா.1027)**

இந்நூற்பாவில் கூறப்படுவதன் மூலம், அமரர் கண்மூடுதல் உள்ளிட்ட அறுவகை நிலைகளிலும் குற்றமற்ற காதலை முழுமையாக அடைய முடியாத நிலை விளக்கப்படுகிறது. மேலும், போர்க் களத்தில் உயிரிழந்த வீரனின் மனநிலையும் அவனுடைய கண்களின் வெளிப்பாட்டின் வழியாக உணரப்படுவதாக தொல்காப்பியர் சுட்டிக்காட்டுகிறார். இதன் மூலம், கண்கள் மனித உடலின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் மையமாகவும், உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் முதன்மைக் கருவியாகவும் விளங்குகின்றன என்பது தெளிவாகிறது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில், குறிப்பாக புறத்திணையியலில், வெட்சித் திணையில் தொடங்கும் போர் காஞ்சித் திணையில் நிறைவடைவதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், போரில் உயிரிழந்த வீரனின் காதல் உணர்வுகள்-அன்பு, பிரிவு, காதல், காதல் துன்பம், நிறைவேறாத அன்பு மற்றும் போரில் ஈடுபட்டதின் துயரம் ஆகிய பல நிலைகளும் கண்களின் வாயிலாக வெளிப்படுவதாகத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். இதன் மூலம், மனிதனின் அனைத்து நுட்பமான உணர்வுகளும் கண்களின் வழியாக வெளிப்படுகின்றன என்பதும், கண்கள் உணர்வியல் வெளிப்பாட்டின் முதன்மை ஊடகமாகத் தொல்காப்பியத்தில் விளங்குகின்றன என்பதும் தெளிவாகிறது.

## தொல்காப்பியரின் கண் குறித்த அறிவுசார் கருத்தியல்

இலக்கியங்களில் வெளிப்படும் உணர்ச்சிகளை முழுமையாக ஆராய்ந்து புரிந்துகொள்ளும் ஆற்றல் என்பது மிகக் கூர்மையான அறிவும் நுண்மையான சிந்தனையும் உடையவர்களுக்கே சாத்தியமாகும். இதனைத் தொல்காப்பியர் தமது நூற்பாவில் பின்வருமாறு விளக்குகிறார்:

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே** **(தொல்காப்பியம், பா.1221)**

இந்நூற்பா கூறும் பொருளின்படி, கண்களாலும் செவியாலும் பெறப்படும் அனுபவங்களைத் தெளிவாகவும் ஆழமாகவும் புரிந்துகொள்ளும் திறன் நுண்மையான அறிவும் நுழைபுலமும் உடையவர்களுக்கே உண்டு. அத்தகைய திறன் இல்லாதவர்களுக்கு இலக்கியப் பொருளைச் சரியாகப் புரிந்துகொள்வது கடினமானதாக அமையும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். இதன் மூலம், உணர்வுகளை அறிவார்ந்த முறையில் பகுத்தறியும் திறன் மனிதனின் அறிவு வளர்ச்சியுடன்

நேரடியாக தொடர்புடையது என்பதும், கண்கள் மற்றும் செவிகள் அறிவியல் அனுபவத்தின் முக்கிய ஊடகங்களாக விளங்குகின்றன என்பதும் தெளிவாகிறது.

**கண் பற்றிய மு. வரதராசனின் கருத்து**

மு. வரதராசன் தமது நூலில் கண்களின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு விளக்குகிறார். இக்கருத்து ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்: மனம் புலன்களால் வளர்ந்தது. புலன்களில் கண்களும் செவியும் சிறந்தவை. கண் எத்தனையோ காட்சிகளைக் காண்கிறது; செவி எத்தனையோ ஒலிகளைக் கேட்கிறது. ஆனால் கண் பொருள்களின் அழகை நன்கு கண்டு போற்றக் கற்கவில்லை; செவி ஒலிகளின் இனிய நயத்தை நன்கு கேட்டு மகிழக் கற்கவில்லை. கண்ணும் செவியும் அழகையும் நயத்தையும் உணரும் வகையில் கலை பயிற்சி அளிக்கிறது. இந்தப் பயிற்சியின் பயனாக கண்ணுக்கு ஆழ்ந்து நோக்கும் பார்வையும், செவிக்கு ஆழ்ந்து உணரும் திறனும் கிடைக்கின்றன. இதனால் மனம் மேல் நோக்கிச் சிதறாமல் ஆழ்ந்து பண்பட்டு இன்புறுகிறது. (மு. வரதராசன்). இந்தக் கருத்தின் மூலம், கண் என்பது வெறும் பார்வை உறுப்பாக இல்லாமல், கலை மற்றும் அனுபவப் பயிற்சியின் வழியாக மேம்படும் அறிவுணர்வு கருவியாக விளங்குகிறது என்பது தெளிவாகிறது.

மேற்கூறப்பட்ட மு. வரதராசனாரின் கருத்து ஆழ்ந்து கவனிக்கத் தக்கதாகும். கண்களின் உணர்வை நுட்பமாகப் புரிந்துகொள்ளும் திறன் என்பது இயல்பாக அல்லாது, தகுந்த பயிற்சியின் வாயிலாக மட்டுமே பெறக்கூடியது என அவர் குறிப்பிடுகிறார். உயிரினங்களின் அடிப்படை உணர்வுகளை கண்கள் இயல்பாகவே வெளிப்படுத்தினாலும், அழகையும் இயற்கையின் நயத்தையும் கண்டு ரசிக்கும் திறன் தொடர்ச்சியான பயிற்சியால் மட்டுமே வளர்கிறது என மு.வ. வலியுறுத்துகிறார். இத்தகைய வளர்ச்சிக்கு கலையுணர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. அழகை உணர்ந்து ரசிக்கும் திறன் என்பது ஒரு உயர்ந்த கலைநுணுக்கமாக வெளிப்படுகிறது. எனவே, எந்தக் காலகட்டத்திலும் உலகை ரசித்து புரிந்துகொள்ள கலை உணர்வும் ஆழ்ந்த ஈடுபாடும் அவசியமானவை என்பது தெளிவாகிறது.

**கார் நாற்பதில் கண் வருணனை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான கார் நாற்பது, மதுரைக் கண்ணன் கூத்தனாரால் இயற்றப்பட்டதாகும். அக இலக்கிய மரபில் காதல் சார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதில் இந்நூல் சிறப்பிடம் பெறுகிறது. இதில் இடம்பெறும் ஒரு பாடல் பின்வருமாறு:

**தொடிஇட வாற்றா தொலைந்தோள் நோக்கி**
**வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்**
**கடிதிடி வான முரறு நெடுவிடைச்**
**சென்றாரை நீடம்மீன் என்று** **(கார் நாற்பது, பா.6)**

இப்பாடலில், தலைவன் நீண்ட தூரம் சென்று தலைவியைப் பிரிந்து இருக்கிறான். அவனின் வருகைக்காக தலைவி மிகுந்த துயரத்தில் வருந்துகிறாள். இதைக் கண்ட தோழி, தலைவியை ஆற்றுப்படுத்தும் வகையில், அவளின் கண்களை மாவடுவை இரண்டாகப் பிளந்தது போன்றதாக ஒப்பிட்டு கூறுகிறாள். மேலும், வளையல் அணிந்தால் அது நின்று நிலைக்காமல் தளர்ந்து விழுவது போலவும், அழகிய தோள்களைப் பார்த்து இடி முழங்குவது போலவும் கவிதை நயத்தில் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. நீண்ட தூரம் சென்ற தலைவன் விரைவில் திரும்ப வேண்டும் என்பதையே இயற்கையின் முழக்கம் (இடி) உணர்த்துகிறது என தோழி தலைவியை சமாதானப்படுத்து கிறாள். இவ்விடத்தில், கண்கள் காதலின் முக்கிய குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. காதல் துன்பத்தில் மூழ்கிய தலைவியின் மை தீட்டப்பட்ட கண்கள், மாவடுவைப் பிளந்தது போன்ற தோற்றத்தில் வருணிக்கப்படுவது கவனிக்கத் தக்கதாகும். இதன் மூலம், அழகுக்கும் அன்புக்கும்

அடையாளமாக விளங்கும் கண்கள், அதே சமயம் துயரத்தின் வெளிப்பாட்டாகவும் இலக்கியத்தில் உருவாக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. மனித மனதில் எழும் ஒவ்வொரு உணர்வின் வெளிப்பாட்டிற்கும் கண்களே முதன்மையான ஊடகமாக விளங்குகின்றன என்பது இவ்விடத்தில் நன்கு வெளிப்படுகிறது.

### திரு அருட்பாவில் கண்கள்

இறைவன் அனைவருக்கும் பொதுவானவர்; கற்றவருக்கும் கல்லாதவருக்கும் ஒரே அளவில் அருளை வழங்குபவர். அனைத்திற்கும் காட்சியளிக்கக் கூடிய பரம்பொருளாக விளங்கும் இறைவனின் திருவருட் பெருமையை இராமலிங்க அடிகள் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

**கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே**
**காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே**
**வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே** **(திரு அருட்பா).**

இவ்வரிகளில், இறைவன் காண இயலாதவர்களுக்கும் காணும் ஆற்றல் உடையவர்களுக்கும் ஞானக் கண்ணை அளிப்பவர் எனக் கூறப்படுகிறது. இதன் மூலம், இறைவனின் அருளை உணர்வதற்குக் கண் என்பது ஒரு முக்கியமான குறியீடாக விளங்குகிறது என்பது தெளிவாகிறது. இறைவனைப் பார்வையால் காண இயலாதவர்களும் தமது மனக் கண்ணின் மூலம் அவரது பேராற்றலை உணர முடியும் என இராமலிங்க அடிகள் வலியுறுத்துகிறார். இதன் மூலம், கண்கள் உடலியல் பார்வை மட்டுமல்லாது ஆன்மிக உணர்வின் வெளிப்பாட்டுக் கருவியாகவும் விளங்குகின்றன என்பது புரிகிறது.

### திருவள்ளுவரின் பார்வையில் கண்கள்

திருவள்ளுவர் காதல் உணர்வுகளை கண்களின் வழியாக எளிதில் வெளிப்படுத்த முடியும் என்பதைத் தமது குறட்பாக்களில் நுட்பமாக விளக்கியுள்ளார். காதலர்கள் ஒருவரையொருவர் கண்களால் நோக்கிக் கொள்ளும் நிலையில், வார்த்தைகள் தேவையற்றதாகி விடுகின்றன என அவர் கூறுகிறார்:

**கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல** **(திருக்குறள்)**

இக்குறட்பா மூலம், காதலின் மிக நுண்மையான உணர்வுகள் கண்களின் பரிமாற்றத்தின் மூலம் முழுமையாக வெளிப்பட முடியும் என்பது தெளிவாகிறது. ஆண், பெண் இரு மனங்களும் ஒன்றிணையும் நிலையில், உள்ளுணர்வின் மொழி கண்களின் வழியாகவே வெளிப்படுகிறது என வள்ளுவர் ஆராய்கிறார். மனித உடலின் மிக சக்திவாய்ந்த வெளிப்பாட்டு கருவியாகக் கண்கள் விளங்குகின்றன. ஆயிரக்கணக்கான உணர்ச்சிகளை வார்த்தையின்றி பரிமாறிக் கொள்ளும் திறன் கண்களுக்கு உண்டு என்பது இக்குறட்பா மூலம் உணரப்படுகிறது. மேலும்,

**வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா, ஆயிடை**
**ஆரஞர் உற்றன கண்** **(திருக்குறள் 1179)**

எனும் குறட்பாவில், காதலன் வராத நிலையில் காதலியின் கண்கள் உறக்கமின்றி துன்பத்தில் விழித்திருக்கும்;அதேசமயம்அவர்வந்தாலும்மிகுந்தமகிழ்ச்சியால்உறக்கம்கலைந்துதவிக்கும்நிலையும் விளக்கப்படுகிறது. இதன் மூலம், இன்பமும் துன்பமும் இரண்டிலும் கண்கள் அமைதியற்ற நிலையை அனுபவிப்பதாக வள்ளுவர் காட்டுகிறார். உறக்கம் என்பது மிகுந்த துன்பத்திலும், அளவுக்கு மீறிய மகிழ்ச்சியிலும் ஏற்படாது என்பதையும் மனித மனவியல் நுட்பத்துடன் அவர் வெளிப்படுத்துகிறார். இவ்வாறு, மனித உணர்வுகளின் ஆழ்ந்த வெளிப்பாட்டுக் கருவியாகக் கண்கள் திகழ்கின்றன என்பதைத் திருவள்ளுவர் தமது குறட்பாக்கள் மூலம் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

### பாரதியின் பார்வையில் கண்

திருவள்ளுவரை விட பாரதியின் கவிதைகள் தத்துவார்த்த ஆழத்துடன் வெளிப்படுகின்றன. மனத்தில் உள்ள மாசுகள் நீங்கி, அறிவுக் கண் திறக்கப்படும்போது ஞானம் பிறக்கிறது என்பது பாரதியின் அடிப்படை சிந்தனையாகும். இதனை அவர் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்:

**கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்**
**தனமும் இன்பமும் வேண்டும் தரணியிலே பெருமை வேண்டும்**
**கண் திறந்திட வேண்டும் காரியத்தில் உறுதி வேண்டும்**

பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும் (பாரதியார்). இப்பாடல் மூலம், மனிதன் வாழ்க்கையில் வெறும் உடல் கண்களால் அல்லாது, அறிவுக் கண்களால் உலகை அணுக வேண்டும் என்பது பாரதியின் கருத்தாக வெளிப்படுகிறது. வாழ்க்கையின் சரி-தவறுகளை நுணுக்கமாக ஆராய்ந்து, சரியான முடிவுகளை எடுத்து முன்னேற வேண்டும் என்பதே அவரது தத்துவமாகும். வெறுமனே பார்வைத் திறனை அல்லாது, அறிவு சார்ந்த பார்வை-அதாவது அறிவுக் கண்-மூலம் உலகை அணுக வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை பாரதி இப்பாடலில் வெளிப்படுத்துகிறார். இதன் காரணமாகவே அவர் இன்றளவும் மகாகவிஞர் எனப் போற்றப்படுகிறார்.

### திருத்தக்க தேவரின் கண்சார் கருத்தியல்

சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் பதுமையின் கண்களை அழகியல் நுட்பத்துடன் வருணிக்கிறார். சீவகனும் பதுமையும் இணைந்து இன்புற்ற காட்சி பின்வருமாறு விவரிக்கப்படுகிறது:

**வாளும் வேலும் மலைந்தரி யார்ந்த கண்ணாள்**
**வார்கழல் மைந்தனும் ஆயிடைத்**
**தோளும் தாளும் பிணைந்துருவொன்றெய்தி**
**நாளும் நாகர் நுகர்ச்சி நலத்தரோ** **(சீவக சிந்தாமணி, பா.1347)**

இப்பாடலில், பதுமையின் கண்கள் வாளையும் வேலையும் விட கூர்மையானவை எனக் கவித்து வமாக வருணிக்கப்படுகின்றன. செவ்வரி ஓடும் அவ்விழிகள் அழகின் சின்னமாகவும் கவர்ச்சியின் மையமாகவும் சித்தரிக்கப்படுகின்றன. இவ்வருணனையின் வழியாக, திருத்தக்க தேவர் தத்துவ நோக்கத்தை விட அழகியல் நயத்தை முன்னிறுத்தி இலக்கியத்தை உருவாக்கியுள்ளார் என்பது தெளிவாகிறது. இன்பச்சுவை நிறைந்த இலக்கியத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரது இலக்கியக் கொள்கை இவ்விடத்தில் வெளிப்படுகிறது.

### பாரதிதாசனின் கண்சார்ந்த கருத்தியல்

பாரதிதாசன் சமத்துவ சிந்தனையை மையமாகக் கொண்டு தனது கவிதைகளை உருவாக்கியவர். உழைப்பே உலகின் அடிப்படை எனும் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். அவர் கூறுகிறார்:

**மண் மீதில் உழைப்பாரெல்லாம் வறியராம் உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையர் செல்வராம் இதைத் தன்**
**கண்மீதில் பகலிலெல்லாம் கண்டுகண் டந்திக்குப் பின்**
**விண்மீனாய்க் கொப்புளித்த விரிவானம் பாராய் தம்பி** **(பாரதிதாசன்).**

இப்பாடலில் உழைக்கும் மக்களின் துயரத்தை கவிஞர் தீவிரமான சமூக நோக்கில் வெளிப்படுத்துகிறார். உழைப்பாளர்களின் துன்பத்தை வானம் தன் கண்களால் காண்கிறது எனக் கற்பனையாக்கி, அதன் வேதனையை விண்மீன்களின் தோற்றத்துடன் இணைக்கிறார். இவ்வாறு இயற்கையையே ஒரு கண் எனக் கற்பனை செய்து சமூக அநீதியை வெளிப்படுத்துவது பாரதிதாசனின் தனித்துவமான கவிதை நுட்பமாகும்.

## முடிவுரை

உடல் உறுப்புகளில் கண்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையோ, அதே அளவிற்கு இலக்கியங்களிலும் கண்கள் முக்கிய குறியீடாகப் பயன்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பாளியும் கண்களின் வழியாக அழகியல், தத்துவம், ஞானம், சமூகச் சிந்தனை ஆகியவற்றை வெளிப் படுத்தியுள்ளனர். வள்ளுவர் காதல் உணர்வின் நுட்பத்தையும், தொல்காப்பியர் அறிவியல் பார்வையையும், பாரதி அறிவுக் கண் தத்துவத்தையும், பாரதிதாசன் சமூக உணர்வையும், திருத்தக்க தேவர் அழகியலையும் கண்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். இதன் மூலம், கண்கள் என்பது வெறும் உடலுறுப்பு அல்ல; மனித உணர்வுகளின், சிந்தனையின் மற்றும் இலக்கிய வெளிப்பாட்டின் மையக் கருவியாகத் திகழ்கிறது என்பது தெளிவாகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் - தொல்காப்பியர், பாடல் எண்: 1027, பக். 397
2. தொல்காப்பியம் - மெய்ப்பாடுகளின் நுட்பம், பக். 492
3. மு. வரதராசன், இலக்கியத் திறன், பக். 28
4. எஸ். கௌமாரீஸ்வரி (தொகுப்பு), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், பக். 358
5. இராமலிங்க அடிகள், திருவருட்பா, பக். 768
6. எஸ். கௌமாரீஸ்வரி (தொகுப்பு), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் - குறிப்பறிதல், பக். 859
7. எஸ். கௌமாரீஸ்வரி (தொகுப்பு), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் - கண்விதுப்பழிதல், பக். 869
8. பாரதியார், பாரதியார் கவிதைகள், பக். 114
9. திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி, பா. எண்: 1347 (tamilvu.org)
10. பாரதிதாசன், அழகின் சிரிப்பு (tamilvu.org)

## துணை நூற்பட்டியல்

1. ச. வே. சுப்ரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001.
2. மு. வரதராசன், இலக்கியத் திறன், பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு: 2001.
3. எஸ். கௌமாரீஸ்வரி (தொகுப்பு), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
4. இராமலிங்க அடிகள், திருவருட்பா, சன்மார்க்க தேசிகன் பதிப்பு, 1972.
5. பாரதியார், பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு: 1998.
6. தா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2006.